முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

இ.ம.எண்.26/2018

நிறைவேற்றுகை மனு எண்.27/2017

ம..சா.1– ஜின்னா

24.07.2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் என்ன பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மனு வாடகைச் சொத்தை வேலுச்சாமி எனக்கு வாடகைக்கு கொடுத்து இருந்தார். அதில் நான் கட்டிடம் கட்டி உள்ளேன். திடீரென்று காலி செய்யும்படி சொன்னதால் மனு தாக்கல் செய்துள்ளேன். என்ன முன் தொகை செலுத்தினீர்கள் என்றால் ஒரு லட்சம் கொடுத்துள்ளேன். மாத வாடகை என்ன என்றால் மாதம் ரூ.8,000/–ஆகும்.

2) 15.5.2009 ல் வாடகை பேசி முடிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டு எழுதிக் கொண்டோம் என்றால் சரிதான். எத்தனை மாதம் வாடகை கொடுத்துள்ளேன் என்றால் 7 மாதங்கள் நேரடியாக செலுத்தினேன். அதன் பிறகு வாடகையை நீதிமன்றத்தில் கட்டி உள்ளேன். வாடகை பாக்கியிருப்பதாக சொல்லி வாடகை சொத்தில் இருந்து என்னை காலி செய்யும்படி வேலுச்சாமி மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சரிதான். அந்த மனு ஆர்சிஓபி 18/2011 என்றால் சரிதான்.

3) ஆர்சிஓபி 18/2011 ல் 17.01.2017 ம் தேதி மனுச் சொத்தில் இருந்து நான் காலி செய்ய வேண்டும் என தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. ஆர்சிஓபி 18/2011 ல் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அறிவிப்பு வந்ததா என்றால் வரவில்லை. நீதிமன்றத்தில் ஆர்சிஓபி 18/2011 மனுவில் என் சார்பாக வழக்கறிஞர் ஆஜரானார் என்றால் சரிதான். அதன்பிறகு எத்தனை முறை வழக்கறிஞரை நேரில் நான் பார்த்தேன் என்றால் பலமுறை பார்த்தேன். வாடகை நீதிமன்றத்தில் கட்டும் போதெல்லாம் பார்த்தேன்.

4) வாடகையை நான் அமர்த்திய வழக்கறிஞர் நீதிமன்றத்தில் முறையாக செலுத்தினார் என்றால் ஆமாம். நான் வேலுச்சாமி மீது அ.வ.எண்.342/2011 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் என்னை வேலுச்சாமி சட்டத்திற்கு புறம்பாக காலி செய்யக் கூடாது என பரிகாரம் கோரினேன் என்றால் சரிதான். வேலுச்சாமி தாக்கல் செய்த ஆர்சிஓபி 18/2011 மற்றும் அ.வ.எண்.342/2011 ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் ஒன்று தான் என்றால் சரிதான்.

அ.வ.எண்.342/2011 ஆனது 21.10.2016 ம் தேதி தள்ளுபடியானது என்றால் எனக்கு தெரியாது.

5) அ.வ.எண்.342/2011 வழக்கு விசாரணையின் போது வழக்கறிஞரை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நீதிமன்றத்திற்கு வந்திருந்தீர்களா என்றால் வந்திருந்தேன். அ.வ.எண்.342/2011 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு மீண்டும் கோப்புக்கு எடுக்க மனு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் வேறு வழக்கறிஞரை வைத்து மனு போடுவதாக முதலில் நான் அமர்த்திய வழக்கறிஞர் நிறைவேற்று மனு தாக்கல் செய்த பிறகு சொன்னார். நிறைவேற்று மனுவிற்கு நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் இல்லை.

6) ஆர்சிஓபி 18/2011 ல் தீர்ப்பு ஏற்பபட்ட பிறகு வழக்கறிஞரை சென்று பார்த்தீர்களா என்றால் 4,5 நாட்கள் கழித்து பார்த்தேன். வாடகை ரூ. 80 ஆயிரம் கொண்டு வரச் சொன்னார். வேறு எதுவும் சொல்லவில்லை. ரூ.80 ஆயிரம் நீதிமன்றத்தில் கட்டி விட்டீர்களா என்றால் கட்டிவிட்டேன். மனுச் சொத்தில் கட்டிடம் கட்டியதற்கு ஆதாரமுள்ளதா என்றால் சிமெண்ட் வாங்கிய ரசீது, மேஸ்திரி கொடுத்த ரசீது உள்ளது. மனுச் சொத்தில் கட்டிடம் கட்ட வேலுச்சாமியிடம் அனுமதி பெற்றீர்களா என்றால் பெற்றேன். எழுத்துப்பூர்வமான அனுமதி வேலுச்சாமி கொடுத்தாரா என்றால் இல்லை. மனுச் சொத்தில் கட்டிடம் நான் கட்டியதாக மனுவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

7) ஆர்சிஓபி 18/2011 ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு இன்றைய தேதி வரை ரத்தாகவில்லை என்றால் சரிதான். ஆர்சிஓபி 18/11 ல் ஏற்பட்ட உத்தரவை நிறைவேற்றக்கூடாது என தடை உத்தரவு உள்ளதா என்றால் அதற்காகத் தான் மனு தாக்கல் செய்துள்ளேன். மனுவில் முதலில் அமர்த்திய வழக்கறிஞர் மீது சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் மனுவிற்காக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆர்சிஓபி 18/2011 ல் ஏற்பட்ட உத்தரவு விவரம் எப்போது தெரியும் என்றால் 2017 ம் வருடம் தெரியும். மாதம் தேதி ஞாபகமில்லை.

8) 14.12.2017 ம் தேதி ரூ 80 ஆயிரம் நீதிமன்றத்தில் செலுத்தியதற்கு ஆதாரமுள்ளதா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் வாடகையை என் வழக்கறிஞரிடம் கொடுப்பேன். அவர் ஜனார்த்தனன் வழக்கறிஞரிடம் கொடுத்துவிடுவார். நான் வாடகையை ஜனார்த்தனன் வழக்கறிஞரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. செந்தில் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். அவர் ஜனார்த்தனன் வழக்கறிஞரிடம் கொடுத்து விடுவார். வாடகையை நீதிமன்றத்தில் கட்டிய பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து இந்த மனு

தாக்கல் செய்தேன் என்றால் ஒரு மாதத்திற்குள் தாக்கல் செய்தேன். ஒரு மாதம் கழித்து தாக்கல் செய்ததாக சொல்வது தவறு மனு 12.2.2018 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9) ஆர்சிஓபி 18/2011 ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யும்படி எப்போது மனு தாக்கல் செய்யப்பட்டது என ஞாபகமுள்ளதா என்றால் இல்லை. ஆர்சிஓபி 18/2011 ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய தாக்கல் செய்த மனு என்ன ஆனது என்று முதல் விசாரணை மற்றும் மனுவில் சொல்லவில்லை என்றால் முதலில் வைத்த வழக்கறிஞர் மனு கோப்புக்கு எடுக்கவில்லை என மனுவை திருப்பிக் கொடுத்தார். அதன்பிறகு இந்த மனு வழக்கறிஞர் மூலம் மனுவை தாக்கல் செய்தேன். வேலுச்சாமி தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். மனுச் சொத்துக்கு நான் வாடகை செலுத்தவில்லை என்றால் அமீனா வந்த தேதியில் இருந்து கட்டவில்லை. 6 வருடமாக வாடகை செலுத்தவில்லை என்றால் மரகதம் என்பவர் வேலுச்சாமி மற்றும் என்மீது மனுச் சொத்துக்கு வாடகையை மரகதத்திடம் தரவேண்டும் என வழக்கு தாக்கல் செய்ததால் செலுத்தவில்லை.

10) மரகதம் தாக்கல் செய்த வழக்கில் மனுச் சொத்துக்கான வாடகையை செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. மரகதத்தை நான் தான் தூண்டிவிட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மனுச் சொத்தில்இருந்து நான் சட்டப்படி காலி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தவறான சங்கதிகள் அடிப்படையில் மனு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.